**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.415/2019**

| Deposition of Name | கனகசுந்தரம் SSI | Prosecution | LW-2 as PW2. |
|---|---|---|---|
| Father Name | தங்கவேலு | Defence | |
| Police Station. | கடற்கரை காவல்நிலையம் வேதாரண்யம் P.S | Taluk | வேதாரண்யம் |
| District | நாகப்பட்டினம் | Age | 59/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **13.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை குவிமுச .317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடற்கரை காவல்நிலையம் வேதாரண்யத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் சீர்காழி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது கடந்த 21.05.2018 ம் தேதி இரவு 20.00 மணியளவில் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜாராமன் மற்றும் தலைமைக்காவலர் இளங்கோவன் ஆகியோருடன் ரோந்து பணியில் இருந்த போது BJP தேசிய செயலாளர் H.ராஜா', மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி பொருப்பாளர் அகோரம், BJP மாநில செயலாளர் கருப்பு முருகானந்தம், நாகை மாவட்ட BJP செயலாளர் வரதராஜன் ஆகியோருடன் 30(2) Police Act அமலில் இருக்கும் போது சாரட்டு வண்டியில் ஒலி பெருக்கி வைத்து பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ஊர்வலம் வந்து மற்ற மதங்களை இழிவு படுத்தி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி பேசினார்கள். மறுநாள் 22.05.2018 காலை 8.00 மணிக்கு சீர்காழி காவல்நிலைய குற்ற எண். 145/2018 இதச பிரிவுகள் 143, 188, 506(i), 504, 505(i)(b) IPC கீழ் வழக்கு பதிவு செய்த போது நாங்கள் அதற்கு உதவியாக இருந்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகாரினை யார் கொடுத்தார் என்றால் ராமச்சந்திரன் உதவி ஆய்வாளர். முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்ததும் உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் தான் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக குறிப்பிடுவது 21.05.2018 இரவு 8.00 மணி என்றால் சரிதான். FIR பதிவு செய்தது 22.05.2018 காலை 8.00 மணி என்றால் சரிதான். ராமச்சந்திரன் புகாரினை எழுத்து மூலமாக காவல் நிலையத்தில் கொடுத்தார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இந்த வழக்கில் இல்லை என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலிலும் ராமச்சந்திரன் சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் சேர்க்கப்படவில்லை.

நான் 21.05.2018 ம் தேதி சாட்சிகள் ராஜாராமன், ராமச்சந்திரன், இளங்கோவன் ஆகியோருடன் நாங்கள் ரோந்து பணியில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சீர்காழி பேருந்து நிலையம் அருகில் என்று கூறியுள்ளேன் ஆனால் எந்த இடம் என்று சம்பவ இடத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் கால கட்டத்தில் தடையாணை உத்தரவு எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை அமலில் இருந்தது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் 4 பேர் தான் சாரட்டு வண்டியில் வந்தார்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாரட்டு வண்டி இந்த வழக்கில் கைப்பற்ற பட்டதா என்றால் இல்லை. அந்த சாரட்டு வண்டி யாருடைய வண்டி, அது சம்பந்தமான ஆவணங்கள் விசாரித்து பெறப்படவில்லை என்றால் சரிதான். சாரட்டு வண்டியில் எந்த இடத்தில் ஆரமித்து எந்த இடத்தில் முடித்தார்கள் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் BJP யின் மாநில மாவட்ட அளவில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் என்றால் சரிதான்.

பொதுக்கூட்டம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மற்றும் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பொதுக்கூட்டத்தில் ஒலி பெறுக்கி மூலம் யார் பேசினார்கள் என்று பெயரை

குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். யார் மற்ற மதங்களை இழிவு படுத்தி, கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும் யார் குறிப்பிட்டு சொன்னார்கள் என்றால் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல எந்த மதத்தை இழிவு படுத்தியதாக விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்கொடுத்தவர் மற்றும் சாட்சிகள் அனைவரும் காவல்துறையை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால்சரியல்ல. எதிரிகள் BJPகட்சியில் முக்கிய பொறுப்பாளர்கள் என்பதால் அப்போது உள்ள ஆளுங்கட்சியின் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் ஆளுங்கட்சியின் தூண்டுதலின் பேரிலும் பொய்யான புகாரை கொடுத்து எதிரிகள் மீது பொய்யாக FIR போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் எங்கள் காவல்துறையை சார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் தொடர்பாக வெளி நபர்கள் யாரும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த ஒரு சம்பந்த தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.415/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜாராமன் SSI Rtd. | Prosecution | LW–1 as PW1. |
| Father Name | பஞ்சவர்ணம் | Defence | |
| Village | திருக்கடையூர் | Taluk | தரங்கம்பாடி |
| District | மயிலாடுதுறை | Age | 64/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **13.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை குவிமுச .317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கடந்த 2018 ம் ஆண்டு சீர்காழி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 21.05.2018 ம் தேதி இரவு 8.00 மணிக்கு சீர்காழி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் சிறப்பு உதவி ஆய்வாளர் கனகசுந்தரனம் தலைமை காவலர் இளங்கோவன் ஆகியோர்களுடன் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் ரோந்து பணியில் இருக்கும்போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து H ராஜா தேசிய செயலாளர் BJP அவர்கள் தலைமையில் அகோரம் மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர், கருப்பு முருகையன் மாநில செயலாளர் BJP, வரதராஜன் மாவட்ட செயலாளர் BJP, இவர்களுடன் பல பேர் கூடி சாரட்டு வண்டியில் பொதுமக்களுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் 30(2) Act அமலில் இருக்கும் போது யாரிடமும் எந்த வித அனுமதியும் உரிமமும் பெறாமல் ஊர்வலத்திற்கு வந்து மற்ற மதங்களை இழிவு படுத்தும் வகையில் பேசி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டியும் பேசியுள்ளார்கள்.

எதிரிகள் மீது சீர்காழி காவல் நிலைய குற்ற எண். 145/2018 சட்டப்பிரிவுகள் 143, 188, 506(i), 504, 505(i)(b) IPCயின் படியாக 22.05.2018 ம் தேதி காலை 8.00 மணிக்கு வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன்.

ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2018 ல் சீர்காழி காவல்நிலையத்தில் பணிபுரிந்த பணி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகாரினை யார் கொடுத்தார் என்றால் ராமச்சந்திரன் உதவி ஆய்வாளர். முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்ததும் உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் தான் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக குறிப்பிடுவது 21.05.2018 இரவு 8.00 மணி என்றால் சரிதான். FIR பதிவு செய்தது 22.05.2018 காலை 8.00 மணி என்றால் சரிதான். ராமச்சந்திரன் புகாரினை எழுத்து மூலமாக காவல் நிலையத்தில் கொடுத்தார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இந்த வழக்கில் இல்லை என்றால் சரிதான். சாட்சிப்பட்டியலிலும் ராமச்சந்திரன் சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் சேர்க்கப்படவில்லை.

நான் 21.05.2018 ம் தேதி சாட்சிகள் கனகசுந்தரம் , ராமச்சந்திரன், இளங்கோவன் ஆகியோருடன் நாங்கள் ரோந்து பணியில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சீர்காழி பேருந்து நிலையம் அருகில் என்று கூறியுள்ளேன் ஆனால் எந்த இடம் என்று சம்பவ இடத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் கால கட்டத்தில் தடையாணை உத்தரவு எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை அமலில் இருந்தது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரிகள் 4 பேர் தான் சாரட்டு வண்டியில் வந்தார்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாரட்டு வண்டி இந்த வழக்கில் கைப்பற்ற பட்டதா என்றால் இல்லை. அந்த சாரட்டு வண்டி யாருடைய வண்டி, அது சம்பந்தமான ஆவணங்கள் விசாரித்து பெறப்படவில்லை என்றால் சரிதான். சாரட்டு வண்டியில் எந்த இடத்தில் ஆரமித்து எந்த இடத்தில் முடித்தார்கள் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் BJP யின் மாநில மாவட்ட அளவில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் என்றால் சரிதான்.

பொதுக்கூட்டம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மற்றும் அதற்கான

ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பொதுக்கூட்டத்தில் ஒலி பெறுக்கி மூலம் யார் பேசினார்கள் என்று பெயரை குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். யார் மற்ற மதங்களை இழிவு படுத்தி, கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள் என்றும் யார் குறிப்பிட்டு சொன்னார்கள் என்றால் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல எந்த மதத்தை இழிவு படுத்தியதாக விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்கொடுத்தவர் மற்றும் சாட்சிகள் அனைவரும் காவல்துறையை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால்சரியல்ல. எதிரிகள் BJPகட்சியில் முக்கிய பொறுப்பாளர்கள் என்பதால் அப்போது உள்ள ஆளுங்கட்சியின் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் ஆளுங்கட்சியின் தூண்டுதலின் பேரிலும் பொய்யான புகாரை கொடுத்து எதிரிகள் மீது பொய்யாக FIR போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார் தாரர் எங்கள் காவல்துறையை சார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் தொடர்பாக வெளி நபர்கள் யாரும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த ஒரு சம்பந்ததமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**